


Metro லீடர்
மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 04 இதழ்: 277 2024.09.21 பக்கங்கள்:03 editorml21@gmail.com விலை:75/-

# ஜனாதிபதித் தேர்தல் வாக்குப்பதிவு இன்று

**நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெற்றன. பொதுமக்கள் காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை தமது வாக்குகளை செலுத்தினர்.**








**(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)**

நாட்டின் 9 ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று (21) சனிக்கிழமை நாடு பூராகவும் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்று நிறைவடைந்துள்ளது.

மக்கள் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டிருந்த 13 ஆயிரத்து 421 வாக்களிப்பு நிலையங்களில் தங்களது வாக்குகளை செலுத்தினர்.

வாக்களிப்பு நிலையங்களில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் வெளிநாட்டு கண்காணிப்பு குழுவினரும் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இத்தேர்தலில் நாடளாவ ரீதியில் 70 சதவீதத்திற்கு மேல் வாக்குகள் பதிவாகியுள்ளன. இன்றைய தினத்தில் சிறு சிறு அசம்பாவிதங்கள் நடைபெற்றதாகவும் பெரும் அசம்பாவிதங்கள் இடம் பெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## எதிர்வரும் திங்கட்கிழமை விசேட விடுமுறை தினம்




எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை விசேட விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன இதனை அறிவித்துள்ளார்.

## வாக்குச்சாவடிகளில் விசேட கண்காணிப்பு

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெற்ற நிலையில், தேர்தல் முறை கேடுகள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் விசேட கண்காணிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் உள்நாட்டு மற்றும் சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் கடந்த ஒரு மாத காலமாக தேர்தல் வன்முறைகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் வலுவான கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

02 ⏭

## இந்தத் தேர்தல் இலங்கையின் வரலாற்றை மாற்றும்

**அனுரகுமார திஸாநாயக்க**



இந்த தேர்தல் இலங்கையின் வரலாற்றை மாற்றும் தேர்தலாக அமையும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பஞ்சிகாவத்தை அபேசிங்கராம விகாரையில் நிறுவப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்தில் வாக்களித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தேர்தல் இலங்கையின் வரலாற்றை மாற்றும் என்று நான் நினைக்கிறேன்

02 ⏭

## ஜனாதிபதித் தேர்தலில் 80 சதவீத வாக்குப் பதிவு

**அஞ்சல் மூல வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பம்**

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் சுதந்திரமாக - அமைதியாக இன்று மாலை 4 மணியுடன் நிறை வடைந்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



## நாட்டில் அமைதியான தேர்தலை நடாத்த முடிந்தமை மகிழ்ச்சி

**ஜனாதிபதி ரணில்**

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க ஆகியோர் இன்று (21) காலை கொழும்பு பல்கலைக்கழக கல்லூரியில் வாக்களிப்பு நிலையத்திற்கு சென்று வாக்களித்தனர்

02 ⏭



## ஊரடங்கு சட்டம் அமுல்

இன்றிரவு 10.00 மணி முதல் நாளை காலை 6.00 மணி வரை ஊரடங்கு சட்டம் அமுலிருக்கும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். சட்டத்தை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாக்குச்சாவடிகளில்...........

இவ்வாறானதொரு பின்னணியில் தேர்தல் தினமான இன்றும், வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப் படும் என எதிர்பார்க்கப்படும் நாளையும் தமது குழுவினரை விசேட மனித உரிமைகள் கண்காணிப்பு நடவடிக்கை யில் ஈடுபடுத்தியிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது

## நாட்டில் அமைதியான தேர்தலை.............

பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி, அனைவரும் அமைதியாக செயற்பட்டு ஒன்றிணைந்து புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றார்.

இந்த நாட்டில் ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலையை நிறைவு செய்து, தேர்தலை நடத்துவதற்கான பின்னணியை தான் உருவாக்கியதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இன்று நடைபெறும் தேர்தல் இந்த நாட்டு மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு புதிய தலைமைத்துவத்தை பரிசீலிப்பதற்கு இது சரியான தருணம் என நம்புகின்றீர்களா என ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி, கடந்த இரண்டு வருடங்களில் தான் நாட்டின் பொருளாதாரத்தையும் ஜனநாயகத்தையும் பலப்படுத்தியதாகத் தெரிவித்தார்.

மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாத்து தேர்தலை நடாத்த முடிந்தமை குறித்து தாம் பணிவுடன் பெருமை கொள்வதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த தேர்தல் இலங்கையில் ஒரு திருப்புமுனையாகவும், நாட்டை அழித்த பாரம்பரிய அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளில் இருந்து விலகி நாட்டில் புதிய சமூக மற்றும் அரசியல் அமைப்பை கட்டியெழுப்புவதற்கான பெறுமதியான சந்தர்ப்பம் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தமக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டில் அமைதியான மற்றும் சுதந்திரமான தேர்தலை நடாத்த முடிந்தமைக்கு மகிழ்ச்சி தெரிவித்ததோடு, தேர்தலில் பங்குபற்றிய அனைத்து வேட்பாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் நன்றி தெரிவித்தார்.

## இந்தத் தேர்தல் இலங்கையின்.........

காலங்காலமாக, அரசாங்கங்களை அமைப்பதற்கும், அரசாங்கங்களை கவிழ்ப்பதற்கும், அரசாங்கங்களை மாற்றுவதற்கும், தலைவர்களை மாற்றுவதற்கும் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. இந்த தேர்தல் இலங்கை வரலாற்றில் மிக வலுவான திருப்புமுனை என்று நான் நினைக்கிறேன்.

அதேபோன்று வெற்றிக்குப் பிறகு அனைவரும் அமைதியாக இருக்கவும், ஜனநாயகத்தின் சிறப்பியல்பு அதுவாகும்.

எந்தவொரு நபரும் அவர்கள் விரும்பும் அரசியல் இயக்கத்திற்கு பணியாற்றலாம். அவர்கள் விரும்பும் அரசியல் இயக்கத்திற்கு வாக்களிக்கும் உரிமை உண்டு. அந்த உரிமையை நாம் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்றார்.

## முன்னனி வேட்பாளர்கள் தமது வாக்கினை செலுத்திய போது









# தேர்தல் முடிவுகள் நள்ளிரவுக்குள் வெளியிட முடியும்

### தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

ஜனாதிபதி தேர்தலின் தொகுதி வாரியான முடிவுகளை நள்ளிரவு 12.00 மணிக்கு முன்னதாக வெளியிட முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

விசேட ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வாக்கு எண்ணும் நிலையங்களிலும் இரவு 8.00 மணி முதல் 9.00 மணிக்குள் வாக்குகளை எண்ணும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் தபால்மூல வாக்களிப்புக்கு 712,318 பேர் தகுதி பெற்றிருந்த நிலையில், அவர்களில் 6,200 ஐத் தவிர ஏனைய அனைவரும் தமது வாக்குகளை அளித்துள்ளதாக சமன் ஸ்ரீ ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

நாட்டிலுள்ள 429 வாக்கு எண்ணும் மையங்களில் தபால் வாக்குகள் எண்ணப்படும் நடவடிக்கை மாலை 4.00 மணிக்குத் ஆரம்பிக்கப்பட்டது என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் கூறினார்.

# ஜனாதிபதி தேர்தல் - 2024

## பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளை வழங்கிய காட்சிகள் சில.....
















